# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2299/04 - 2022 සැප්තැම්බර් මස 26 වැනි සඳුදා - 2022.09.26

*2299/04 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ் நீர்கொழும்பு மாநகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

*நீர்கொழும்பு மாநகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, இறப்பெய்தியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் :*

*மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ், நீர்கொழும்பு மாநகர சபையின் இலக்கம் 27 – தெற்கு பிடிபன மேற்கு வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட போதலகே ஷெல்டன் பிரனாந்து என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேரந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான நீர்கொழும்பு மாநகர சபையின் இலக்கம் 27 – தெற்கு பிடிபன மேற்கு வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்:*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக மிஹிந்துகுலசூரிய எம்மானுவெல் ஹர்மன் பெர்னட் குரேரா என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்;*

*நீர்கொழும்பு மாநகர சபையின், தெரிவத்தாட்சி அலுவலரான கருணாசிங்ஹ ஜயரத்னகே சம்பத் மாதவ ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு மிஹிந்துகுலசூரிய எம்மானுவெல் ஹர்மன் பெர்னட் குரேரா என்பவர் நீர்கொழும்பு மாநகர சபையின் இலக்கம் 27 – தெற்கு பிடிபன மேற்கு வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

**கே. ஜே. எஸ். மாதவ,**
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*நீர்கொழும்பு மாநகர சபை.*

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*கம்பஹா,*
*2022, செத்தெம்பர் 14.*

EOG *09- 0301*


1A - G 37620 — 16 (2022/09) *இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*